THE HON. THIRU K. NARAYANASWAMI: So far as the question of the Hon'ble Member Thiru Arumugham is concerned my answer is this. This Government, not even the Central Government has any power to take any action against any High court Judge except for proved incompetence or proved misconduct. That can be done only by way of a motion for impeachment in the Two houses of parliament. Their conditions of service are so secure and they are conceived for ensuring the independecne of the judiciary, and this is from the age old days, Act of 1935 or even earlier. Even the Central Government cannot take action so long as any Judge of the High Court does his legal duty within the bounds of law.

[முற்பகல் 9—50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்.: வினா எண். 486,......

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழாவிலே ஜாதிப் பெயர்களையே எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் முதலியார் என்று சொல்வதும் தாங்கள் அனுமதிப்பதும் சரியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பேரவை குறிப்பேட்டிலே இருக்கட்டும் என்றுதான் அனுமதித்தேன்.

திரு. சி. ஆறுமுகம் : அஃபிஷியலாகவே நாராயணசாமி முதலியார் என்றுதான் சொல்கிறார்கள்..................

மேல் உயர்நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 486—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேல் உயர்நிலைப் பள்ளிகள் திறமையுடன் செயல்பட இப்பள்ளிகளை கல்லூரிகளுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே அண்டையிலே இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ஜூனியர் காலேஜில் இது போன்ற வகுப்புகள் நடத்தப்படுவதையும். மற்ற கல்

லூரிகளிலும் இது போன்ற வகுப்புகள் நடத்தப்படுவதையும் அரசு அறியுமா? அது மட்டுமல்லாமல், மேல் நிலை உயர்நிலைப் பள்ளியை. எங்கே வைப்பது என கருத்து தெரிவிக்க குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தன்னுடைய அறிக்கையில் என்ன கூறி இருக்கிறது என்பதை அறியவரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையைப்பற்றிய விவரம் என்னிடத்திலே இப்பொழுது இல்லை. ஆனால், மேல்நிலை வகுப்புகள் உயர்நிலைப் பள்ளியிலேதான் இருக்க வேண்டுமென்பதுதான் இதுவரையிலும் கூறப்பட்ட அறிஞர்களுடைய கருத்தாகும். ஆகவே, உயர்நிலைப் பள்ளிகளிலே வைத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில், உயர்நிலைப் பள்ளிகளிலும் வைத்திருக்கிறார்கள், ஜூனியர் காலேஜ்களிலும் வைத்திருக்கிறார்கள், கல்லூரிகளிலும் வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் தங்களுடைய வாய்ப்பு வசதிக்கேற்ப, கல்வித்துறை நிபுணர்கள் சொன்ன கருத்துக்களை மாற்றியமைக்காத குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே அமல்படுத்துகிற முறைதான் சிறந்த முறை, அதை எல்லா மாநிலங்களிலும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில், மத்திய அரசு பார்லிமெண்டில் இந்தத் தொடர் கூட்டத்திலே ஒரு மசோதாவைக் கொண்டுவர இருக்கிறது.

திரு. இரா. சண்முகம்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளியைக் கல்லூரியிலே இருந்து பிரித்துத் தனியாக உயர்நிலைப் பள்ளியிலே வைத்திருக்கிறார்கள். ஆனால், மேல்நிலைப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் ஒருவருடைய மேற்பார்வையின் கீழ் இயங்குவது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று கருதுகிறார்களே, ஆகவே, மேல்நிலைப் பள்ளி மானேஜ்மென்டை இன்றைக்குத் தனியாகப் பிரித்து, தனி அதிகாரிகளை, ஆசிரியர்களை நியமிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒரு தலைமை ஆசிரியரா. இரண்டு தலைமை ஆசிரியரா என்று கேட்டால், ஒரே தலைமை ஆசிரியர்தான் இருப்பார். உதவித் தலைமை ஆசிரியரை நியமிக்கலாம் என்ற கருத்து பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, மேல்நிலைப்பள்ளிகளை, கல்வி இலாகாவிலேயிருந்து இன்ஸ்பெக்ஷன் செய்வது டி.இ.ஓ. தான் என்று அறிகிறேன். அதைவிட பதவி உயர்வான அதிகாரிகளை வைத்து இன்ஸ்பெக்ஷன் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே உயர்நிலைப் பள்ளிகளையேகூட ஆய்வு செய்வது மாவட்டக் கல்வி அதிகாரி என்ற நிலையை மாற்றி ஒரு குழுவை அமைத்திருக்

கிறோம். அக்குழுவில், அனுபவமிக்க தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதற்கும் ஒரு குழு போய் ஆய்வு செய்கின்ற நிலைமையை நாம் உருவாக்கலாம்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவரவர்களே மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் திரு. கோவை செழியன் சமீபத்திலே கோவையிலே பேசும்பொழுது பிளஸ் 2 வகுப்புளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஜூனியர் கல்லூரிகள் வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது இங்கே சட்டமன்றத்தில் பிளஸ் 2 தொடர்ந்து நடக்குமென்றும் ஜூனியர் கல்லூரிகள் ஏற்படுத்த உத்தேசம் இல்லையென்றும் தெரிவித்தார்கள். ஆகவே 'மாநிலத் திட்டக் குழு கொள்கைக்கும், மாநில அரசு கொள்கைக்கும் இந்தக் கல்வித் துறையிலே முரண்பாடு இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் என்ன பேசினார் என்ற விவரம் என்னிடத்திலே இப்பொழுது இல்லை. ஒருவேளை, அவர் தன்னுடைய சொந்தக் கருத்தைக் கூறியிருக்கலாம். ஆனால், தமிழகத்திலே இப்பொழுது நாம் நடைமுறைப் படுத்துகிற இந்த முறைதான் சிறந்த முறை என்ற கருத்து இருப்பதால், எல்லா மாநிலங்களிலும் இம்முறையைக் கொண்டு வரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் மத்திய கல்வி அமைச்சர் ஒரு மசோதாவை பார்லிமென்டின் இந்த தொடர் கூட்டத்திலே கொண்டுவர இருக்கிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழு கூட இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக எல்லா இடங்களிலும் மாற்றி, இந்த வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு போக வேண்டுமென்ற கருத்தை தெரிவித்திருக்கிறது.

*வினா எண். 487—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தினர் மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியரை நியமித்ததில் கல்வித் துறையின் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் தேதியிடப் பெற்ற 1091 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப் பெற்றுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) அந்த பதவி நியமனத்திற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்பளிக்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் மேற்கொண்ட நடவடிக்கை யாது ?